20

டைப்ரைடிங்க் ஓடம்.

13 JUN 1923

சிங்காநல்லூர் சி. ரத்னமய்யர்.

1923.

Typewriting Odam.

BY

Singanallur C. Rathnamayyar.

இந்த புஸ்தகம் வேண்டுமவர் கீழ்க் கண்ட விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

சி. ரத்னமய்யர்,
சிங்காநல்லூர்.
போத்தனூர் வழி,
கோயமுத்தூர்.

விலை 0-1-6

M1458
N23
1923

கோயமுத்தூர்.

894.811
2340

கணபதி துணை.

டைப்ரைடிங்க் ஓடம்.

காப்பு.

நூதனமாய் இங்நாட்டினிலே
போதனை செய் பலகலையுள்
கைப்பழக்கத்தால் பயிலும்
டைப்ரைடிங்க் இலக்கணத்தை
ஓடமாகப் பாடம் பண்ண
வாணிதேவீ வரந்தருவாய்.

முடுகு.

அமெரிக்கா கண்டத்து யூனைடெட் நாட்டில்
அற்புதமாய் விளங்கிடும் ந்யுயார்க் இலியன்
எனும் பலநகர்களில் இருக்கும் தனவான்கள்
கையெழுத்து மெதுவென்றே கனவேகமாக
எழுதவே செய்தார்கள் டைப்ரைடிங்க் மெஷின்கள்
நன்னயமாய் செய்வதுண்டு நூதனமாம் மெஷின்கள்
மன்னரின் ஆட்சிவளர் இங்க்லாந்து நாட்டில்
ஆலிவர் எம்பயர் ப்லிகென்ஸ்டர்பர் ஹேல்
அண்டர்வுட் ஹாமண்ட் யோஸ்ட் செமிங்க்டன்
எல்லிஸ்மித் டென்ஸ்மோர் வில்யம்ஸ் ஸ்டெர்ன்ஸ்
ஆர்ம்ஸ்ட்ராங்க் பார்லாக் பாக்ஸ் மோயா மானர்க்
இன்னும் பலவுண்டு சொல்ல இடமில்லை.
கண்ணெனத்தகுமென் னும் எழுத்தடிக்கும் பெட்டி
குவலயத்தில் பரவிற்று கொட்டெழுத்துப்பெட்டி
அச்செழுத்தை யொத்திருக்கும் அதிலுள்ள எழுத்து
மெச்சத்தகும் மெஷின்களும் பலவிதமாய் எழுதும்
ஆறெழுகுமிழ்களில் கீபோர்ட் தலங்கும்
என்பத்து நாலு எழுத்துக்கள் அதிலே விளங்கும்.

குமிழ்களொவ்வொன்றிலும் நிமிர்கம்பியுண்டு
நிமிர்கம்பி ஒவ்வொன்றும் பிணைத்திருக்கும் பின்னல்
குமிழையும் எழுத்தையும் இணைக்கம்பி சேர்க்கும்.
அடிக்காகவனைந்திருக்கும் அச்சுக்கட்டை நுனியில்
அப்பர்கேஸ் லோவர்கேஸ் எழுத்துக்களிருக்கும்
அந்தமூள்ள எழுத்துக்களும் வித்தையாய் நிற்கும்
இந்தச்சந்தைவரிசையும் டைப்ரைடர் சொந்தம்.
ஒன்று முதல் பத்துவரை முதல்வரிக்குமிழ்கள்
தன்றுவளர் பலகுறிகள் இக்குமிழ்களிலுண்டு
பத்து பதினொன்று பதினொன்று பத்தாய்
புத்தியாய் அடுக்கினர் நான்குவரிக்குமிழ்கள்.

Q W E R T Y U I O P

க்யு டபில்யு இ ஆர் டி ஒய் யு ஐ ஓ பி

A S D F G H J K L

ஏ எஸ் டி எப் ஜி எச் ஜே கே எல் கூடனை

Z X C V B N M

இஜட் எக்ஸ் லி வி பி என் எம் எழுத்தோடு
இசைத்தார்கள் பலகுறிகள் இடையிடைக்குமிழில்
குறைவாக வந்திடும் கூர்மையுள்ள சிலதை
மெதுவாகப் பதியுமிரு மோதிரவிரற்கென்றும்
வடுவாக வார்த்தசில வலிமை கொள்ளுமென்றே
நடுவிரற்கு இசைவாக நடுநடுவே யமைத்தும்
முக்கியமாய் வந்திடும் அக்கரங்கள் பலவும்
பக்குவமாய்ச்சுட்டுவிரல் பதிக்குமெனத்தேறி
கையிலொரு மூன்றுவிரல் உதவியாற் பயின்று
இருகையால் விசையேறும் வகைதன்னைக் கேட்பீர்.
நீண்டதோர் பல்சட்டம் பதித்து அதன்மேலே
நிலையான மேற்கட்டில் நெகிழ்ந்தோதும் வண்டி
காரியெழில் ஏறிவரும் சிலிண்டருண்டு அடியில்
வாரிவிடும் பீட்ரோல்கள் பேபரைச்சரியாய்
பேபரும் சுற்றிவரும் சிலிண்டருடன் அவ்வேளை
பிடித்திழுப்பீர் பொருத்தியுள்ள லென் ஸ்பேஸ் லிவரை

விலிண்டரின் ஓரத்தில் இருபேபர்கைட் லோகுலாம்
நடுவிலுள்ள லென்ட்டால் கைட் என்வலப் கைடாம்
முன்னுலும் பின்னுலும் ஸ்கேல்களிரண்டுண்டு
எழுத்துக்கள் விழுமிடத்தை ஸ்கேலினுல் அறிவீர்.
ஏழாம் செமிங்க்டனில் எழுத்துக்கள் கீழாம்
பத்தாம் செமிங்க்டனில் முற்றுறத்தெரியும்
மற்றவகை மெஷின்களிலோ மறைவாகவில்லே
கண்ணுக்குத் தெரியவே எழுத்துக்கள் பதியும்.
இருபுறமும் சுற்றிவரும் ரிப்பன் துணி நாடா
இங்கியை ஏந்தியே விலிண்டர் முன்நிற்கும்
யோஸ்டென்னும் மெஷினிலே ரிப்பன் கிடையாது
ஆனலும் மைகொண்ட பாடுண்டு வாலாயத்திலே.
கீழ்வரிக்கு நேராக விலிண்டர் நின்றிருக்கும்
மேலெழுத்து வேணுமெனில் ஷிப்ட் கீயை யமிழ்த்து
ஷீப்ட் கீயை யமிழ்த்தவே பெரிய எழுத்தடிக்கும்
ஷீப்ட் லாக்கை பூட்டிட்டால் லோவர் கேஸ் இல்லே
அப்பர் கேஸ் எழுத்தெல்லாம் விலிண்டரில் பெரிதாம்
அப்படி யிருக்கவே ஷிப்ட் கீயைத் தொட்டால்
விலிண்டரும் கீழ் இறங்கி கீழ்வரிசைக்கெதிராம்.
ஸ்பஷ்டமாய் இடம்விடும் வார்த்தைகளிடையில்
ஸ்பேஸ்பார் என்பதொரு எழுத்திலாத்தகடு
அது கன்னித்தட்டுதற்கு விரல் எது வென்றுமேலோ
வலது கைப்பெருவிரல்தான் வகையாகச்சேரும்
சொன்னதை மறக்காமல் சுறுசுறுப்பாய் இருந்தால்
இன்னமும் சொல்லுகிறன் இன்பமுடன் கேட்ப்பீர், எலேலோ.

2-ம் பாகம்

சட்டமதின் நேராகப்பற்சக்கரத்தடியில்
கட்டியொன்று விட்டதொன்று இரண்டு நாயுண்டு
அம்புவியில் மேன்மைபெறும் இந்த மெஷினுள்ளே

கம்பிக்குதிரை முன்னம் துள்ளிக்குதித்தோடும்
குமிழ் ஒன்றை அழுத்தவே அதனச்சு அடிக்கும்
இணைக்கம்பி பிணைக்கம்பி துணையாகவிருக்கும்.
எழுந்த அவ்வச்சுமே காகிதத்திற் பதியும்
தாமதம் இன்றியே நாயும் குலைக்கும்
குதிரையும் இழுக்கவே வண்டியும் நகரும்
இங்கிதம் அறிந்து உடனே ரிப்பனும் நகரும்.
ஒவ்வொரு எழுத்திற்கும் ஒவ்வொரு பல்லாய்
கவ்வியந்தச் சக்கரத்தைத் தாவிவிடும் நாயும்
இவ்விதம் போகும் வண்டி இடப்புறந்தான் போகும்.
வரிமுடிவில் வந்ததெனக் குறி சொல்லும் போல
பிரியமுடன் அடித்திடும் டிங்கென்று மணியும்
அவ்வண்டிப்பிடி தொட்டு வலப்புறமாயிழுப்பீர்.
ஒன்றிரண்டு மூன்று விதம் வரி இடம்கொடுக்கும்
லேன் ஸ்பேஸ் பால் கேஜ் வண்டியின் வலத்தில்
எழுத்தேதாம் விட்டு விட்டு வண்டியிடம் நகர்ந்தால்
அழுத்துவீர் பாக் ஸ்பேஸை வலம் போகும்வண்டி
வேறேதார் எழுத்தையும் திருத்திக்கொள்ளலாகும்
வேகமாய்க் காரியேஜை நகர்த்தவும் கூடும்
வரிகளுக்கு இடையில் வேணுமொரு இடத்தைச்
சரியாகக் கொடுத்துவரும் லேன் ஸ்பேஸ் லீவரும்.
வரிகளின் ஓரத்தில் ஆறெழுத்தடிக்க
இடமிருக்கும்போது வெகு எச்சரிக்கையாக
அடிக்குமே மணியும் டண்ணென்று தூரிதம்
பிடித்திழுப்பீர் காரியேஜை மற்றோர் வரிக்கு.
வரிகளின் ஓரத்தில் கோணல் வராமல்
மார்ஜினல் ஸ்டாப்பென்னும் ஓரத்தமுட்டு
இரண்டுண்டு அவைகளைத் தாண்டவும் வேண்டில்
மார்ஜினல் ரிலீஸ் கீயை யழுத்துதல் சுலபம்
ரிப்பன் துணி ஒரு ஸ்பூலில் சுற்றிக்கொண்டாலுடனே
தப்பாமல் கீழ்நழுவும் காலி ஸ்பூல் நடுத்தண்டு

தண்டும் நழுவவே லாங்கியர் ஷாப்டில்
வர்ம்கியரில் வந்து நிற்கும் ரிவர்சிங் பின்னீவர்
அப்போது நகர்ந்திடும் இடமோ வலமோ
ரிப்பனில்லாத பக்கம் லாங்கியர் ஷாப்டும்
இருவர்ணம் உள்ள அந்த ரிப்பன் தூணி மெஷினில்
ஒருபுறமே ஓடிவரும் மறுபுறமும் திரும்பும்
காகிதத்தில் ரிப்பன்தூணி பதிக்குங்கலர்தன்னை
காட்டித்தரும் குதித்தெழுந்து ரிப்பன் வைப்ரேடர்
கலங்களைக்காட்டவே டேபுலேடருண்டு
குலுக்கியே ஓட்டிவிடும் வண்டியை கதியாய்
இடை இடையதற்குமே குமிழ்கள் சில உண்டு
நடையாகச்சாடுதற்கு அனுகூலமாய்ப் பின்னல்
அடையாளமிட்டதொரு தோரணைச்சட்டம்
கடைகடைகள் பெற்றதொரு தன்மையுடனிருக்கும்
காகிதங்களின் இடைவைத்துக் காபிகளெடுக்க
கலர்கள் பலகொண்ட கல்ல கார்பன் பேபருண்டு
பிழையான எழுத்தையும் அழிக்க வேணுமானால்
அழகான ரப்பர் உண்டு அதனை இரேஸரெனச் சொல்வார்
உபகரணங்களான பல அக்ஸஸரீஸ் உண்டு
டைப் ப்ரஷ் ஸாப்ட் ப்ரஷ் ஸ்க்ரூட்ரைவர் ஸ்பானர்
இரேஸர் ஷீல்ட் காபிஹோல்டர் ஷாமாஸ்கின் ஆய்லர்
சிரேஷ்டமான புட்போர்ட் ட்ராவலிங் கேஸ் பலவாம்.
யந்திரத்தின் கீல்களில் தூசு வந்தடையாமல்
மந்திரமாய் தினமும் துடைத்து வரவேணும்
லாகவம் வேணுமெனில் ஆயில் இடவேணும்
ஆகவே மெஷின்களும் நிலைபெற்று நிற்கும்.
இருபது வார்த்தைகள் நிமிஷத்திலடித்தால்
எலிமென்டெரி க்ரேட் என்னும் பேறும் பெறலாம்
முப்பது வார்த்தைகள் மும்முறமாயடித்தால்
இன்டர் மெடியெட் கிரேடென்ப தெளிதில் கிடைக்கும்

நாற்பது வார்த்தைகள் ஒரு நிமிஷத்திலடித்தால்
எற்பீரே பெருமையாய் அட்வான்ஸ்ட் கிரேடை
ஸ்பீடென்னும் பரீக்ஷையோ அரை மணிக்காகும்
ஸ்டேட்மெண்ட் வகையாக அனைவர்க்குமுண்டு
விருந்தழைப்பு விளம்பரம் மணவோலை கார்டு
பொருந்தவே புத்தகங்கள் போட்டிடலரம் டைப்பில்.
யுனிவர்ஸல்பார் கிடென்ஷன் மெய்ன் ஸ்ப்ரிங்க் முதலாய்
தனித்தனியே சூட்சுமத்தில் சிருஷ்டியை விளக்கும்
உடலிலே ஐம்புலனும் மனமும்போல் மெஷினில்
சடமான பொருள்களில் சக்தியைக் காட்டும்
விந்தையாம் இக்கலையில் தேர்ந்துமே நீங்கள்
சந்ததமும் பெருமையுடன் மங்களமாய் வாழ்வீர்.
ஏலேலோ ஏலேலோ.

இம்மானுவேல் பிரஸ், கோயமுத்தூர்.